### மாணவர்களின் நலன் பாதிக்கும் வகையில் செயல்படும்

# தமிழ்நாடு ஆளுநரைக் கண்டித்து இன்று ஆர்ப்பாட்டம்!

### கழக மாணவர் அணியினர் பங்கேற்றிட வேண்டும் - அணிச் செயலாளர் சி.வி.எம்.பி. எழிலரசன் அறிக்கை!

சென்னை,ஜூன் 16-

தமிழ்நாடு ஆளுநர் ஆர். என். ரவி அவர்களை கண்டித்து இன்று மாணவர் இயக்கங்களின் கூட்டமைப்பு தமிழ்நாடு சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறுகிறது. இதில் மாணவர்கள் அனைவரும் பங்கேறிட வேண்டுமாய் அணிச் செயலாளர் சி.வி.எம்.பி. எழிலரசன், எம்.எல்.ஏ. அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார்.

இதுகுறித்து அவரது அறிக்கை வருமாறு:

தமிழ்நாட்டில் உயர் கல்வி பயின்ற கல்லூரி, பல்கலைக்கழக மாணவர்களுக்கு பட்டப்படிப்பு சான்றிதழ் வழங்காமல் கடமைத் தவறிய தமிழ்நாடு ஆளுநர் திரு.ஆர். என். ரவி அவர்களை கண்டித்தும், உடனடியாக பட்டப்படிப்பு சான்றிதழை வழங்க வலியுறுத்தியும், ஒன்றிய பாசிச பா.ஜ.க. அரசின் தேசிய கல்விக் கொள்கைக்கு விளம்பரத் தூதுவராகச் செயல்படுவதுடன், தமிழ்நாடு அரசின் அதிகாரத்திற்குட்பட்ட பல்கலைக்கழகங்களின் சுயாட்சி தன்மையை முடக்குகின்ற வகையில் அரசியல் சட்டவிதிகளுக்கு முரணாக பல்கலைக்கழக துணை வேந்தர்களை நியமிப்பதில் அத்துமீறி செயல்பட்டு ஆளுநர் திரு.ஆர்.என். ரவி அவர்களின் ஒழுங்கின்மை போக்கினை கண்டித்தும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் சட்டமன்றப் பேரவையில், பல்கலைக் கழகத் துணைவேந்தர்களை மாநில அரசே நியமிக்கும் வகையில் நிறைவேற்றப் பட்ட சட்டமுன்வடிவுகளை உடனே ஒப்புதல் வழங்கிட வலியுறுத்தியும்,

மருத்துவப் படிப்பில் இடஒதுக்கீட்டை ஒழித்துக்கட்டும் வகையில், பொதுக் கலந்தாய்வு மூலம் மருத்துவப்படிப்பு சேர்க்கை நடைபெறும் என தேசிய மருத்துவ ஆணையம் அறிவித்துள்ளது, மருத்துவக் கல்வியில் மாநில அரசின் உரிமை பறிக்கப்படுவதுடன், சமுதாயத்தில் பிற்படுத்தப் பட்ட, கிராமப்புற மாணவர்களை பாதிக்கின்ற வகையிலும், மாநில அரசிற்கு மருத்துவக் கல்லூரிகளின் மீதான பங்களிப்பினை நீர்த்துப் போகச் செய்யும் வகையிலும் தேசிய மருத்துவ ஆணையம் வெளியிட்டுள்ள மருத்துவப் படிப்புக்கு பொதுக் கலந்தாய்வு முறையை ரத்து செய்யக் கோரி, ஒன்றிய பா.சி.ச. பா.ஜ.க. மோடி அரசை கண்டித்து,

இன்று 16.06.2023 காலை 09.00 மணியளவில் சென்னை, ஆளுநர் மாளிகைக்கு அருகிலுள்ள சின்னமலை சாலை சந்திப்பில், தமிழ்நாடு மாணவர் இயக்கங்களின் கூட்டமைப்பின் (FSO - TN) சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடத்துவதென தீர்மானிக்கப்பட்டு, அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

அந்த ஆர்ப்பாட்டத்தில், கழக மாணவர் அணியின் மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், வட்ட அமைப்பாளர்துணை அமைப்பாளர்கள் உள்ளிட்ட நிர்வாகிகள், கல்லூரி மாணவர் அமைப்புகளின் நிர்வாகிகள், தோழர்களும் பெருந்திரளாக கலந்து கொண்டு, குமரி ஒலிக்கும் நமது கண்டனக் குரல் செங்கோட்டையில் அமர்ந்திருக்கும் ஒன்றிய பா.ஜ.க. அரசின் செவிப்பறையை கிழிக்கச் செய்திட அடலேறுகளே அணிதிரண்டு வாரீர்.. வாரீர்... என அன்புடன் அழைக்கிறேன்.

இவ்வாறு அவர் அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார்.

# பா.ஜ.க. மாநிலத் தலைவர் அமலாக்கத் துறை இயக்குநரா?

அமைச்சர் செந்தில் பாலாஜியை அமலாக்கத்துறை குறி வைக்கும் என்று கடந்த 2022 ஆகஸ்ட் மாதமே அண்ணாமலை பேட்டியில் கூறியிருந்தார். “அதிமுக ஆட்சிக் காலத்தில் போக்கு வரத்து துறை அமைச்சராக இருந்த போது, முறைகேடு செய்ததாக செந்தில் பாலாஜி மீது உள்ள வழக்கில் அமலாக் கத்துறையும் வழக்கு பதிவு செய்துள்ளது. இந்த வழக்கில் நடவடிக்கை எடுக்கப்படுமா?” என்று பா.ஜ.க. தலைவர் அண்ணாமலையிடம் செய்தியாளர் சந்திப்பு ஒன்றில் கேள்வி எழுப்பப் பட்டது. இதற்குப் பதிலளித்த அண்ணாமலை, “வெயிட் பண்ணுங் கண்ணா.. அமலாக்கத்துறை கொஞ்சம் பிஸியா இருக்காங்க. முடிச்சிட்டு இங்கதான் வருவாங்க. விரைவில் அமலாக்கத் துறை அமைச்சர் செந்தில் பாலாஜியை கைது செய்வார்கள்” என்று கூறினார்.

அண்ணாமலையின் இந்தப் பேட்டிக்கு அமைச்சர் செந்தில் பாலாஜியும் அப்போதே பதிலளித்து இருந்தார். அதில், அண்ணாமலை எப்போது அமலாக்கத்துறை இயக்குநரானார்? அல்லது அவர் இணை இயக்குநரா? ஒன்றிய அரசில் அவர் என்ன நிதி அமைச்சராக இருக்கிறாரா? அரவக் குறிச்சியில் தோல்வி அடைந்து ஓடினாரே.. அவர் தானே? என்ன பொறுப்பில் இருக்கிறார் அவர்? அந்த பக்கமே அவரை பார்க்க முடிய வில்லையே? அமலாக்கத்துறை பற்றி அண்ணாமலை எப்படி பேச முடியும்? தன்னிச்சையாக செயல்படக் கூடிய அம லாக்கத்துறை பற்றி அண்ணாமலை எப்படி பேசலாம். இதன்மூலம் அம லாக்கத்துறையை ஒன்றிய அரசு தவறாக பயன்படுத்துவது வெட்ட வெளிச்சம் ஆகிறது. ஆவணங்கள் இருந்தால் அண்ணாமலை கொடுக்கட்டும், பதில் சொல்கிறேன். மின்துறை மீதான அண்ணாமலை குற்றச்சாட்டுக்கு ஏற்கக் கூடியதாக இல்லை. ஒன்றிய அரசு எவ்வளவு டாலருக்கு நிலக்கரி இறக்குமதி செய்ய கூறியுள்ளது என தெரிவிக்க வேண்டும். இதை பற்றித் தான் செய்தி போட வேண்டும். அமலாக்கத்துறை தனி அமைப்பு. ஆனால் பா.ஜ.க.வின் மாநில தலைவராக இருப்ப வர், இன்னார் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்று எப்படி சொல்ல முடியும்? ஒருவேளை அவர்கள் தான் அமலாக்கத்துறையை கட்டுப்படுத்து கிறார்களா? அமலாக்கத்துறையை ஒரு அரசியல் கட்சி எப்படி பயன்படுத்து கிறது என்பது அண்ணாமலை பேச்சில் தெரிகிறது” என்று குறிப்பிட்டிருந்தார்.

ஆனால், அண்ணாமலை கூறிய படி தற்போது செந்தில் பாலாஜியை அமலாக்கத்துறை கைது செய்துள்ளது.

நன்றி : தீக்கதிர்
15-06-2023

### நீட் தேர்வு எழுதும் மாணவர்களுக்கு

# மன உளைச்சலைத் தவிர்க்க மனநல ஆலோசனை நிகழ்வு!

### அமைச்சர் மா.சுப்பிரமணியன் தொடங்கி வைத்தார்!

சென்னை, ஜூன் 16-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று (15.06.2023) சென்னை, தேனாம்பேட்டை, டி.எம்.எஸ் வளாகத்தில், 104 மருத்துவ உதவி மற்றும் தகவல் மையம் மூலம், நீட் தேர்வு எழுதிய மாணவ மாணவியர்களுக்கு ஏற்படும் மன உளைச்சலை தவிர்க்கும் வகையில் “மன நல ஆலோசனை” வழங்கும் நிகழ்வினை தொடங்கி வைத்தார்.

பின்னர் செய்தியாளர்களிடம் அவர் தெரிவித்ததாவது;

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 2021 மே மாதம் 104 தொலைபேசி மருத்துவ மற்றும் தகவல் மையம் 24 மணி நேர சேவை மூலம் நீட் தேர்வு எழுதிய மாணவ, மாணவியர்களுக்கு ஏற்படும் மன உளைச்சல் மற்றும் தற்கொலை எண்ணங்களைத் தவிர்ப்பதற்கு ஆலோசனை வழங்க மே 2021 ஆம் ஆண்டு தொடங்கி வைக்கப்பட்டது. 40 மன நல ஆலோசகர்கள் பணியில் அமர்த்தப்பட்டு மன நல ஆலோசனைகள் வழங்கப்பட்டு வருகிறது.

2022ஆம் ஆண்டில் “1100” அழைப்பு மையம் மூலம் 60 மனநல ஆலோசகர்களை கொண்டு இச் சேவை விரிவுப்படுத்தப்பட்டது. இவ்வாண்டில் (2023) நட்புடன் உங்களோடு மனநல சேவை “14416” தொடங்கப்பட்டு கூடுதலாக 20 மனநல ஆலோசகர்கள் மற்றும் 2 மனநல மருத்துவர்களைக் கொண்டு வலுப்படுத்தப் பட்டு செயல்படுத்தப் பட்டு வருகிறது.

இந்த நிலையில் ‘104’ மருத்துவ உதவி தகவல் மையம் என்பது தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் நோக்கத்தின்படி, இந்தாண்டும் தமிழ்நாட்டில் இருந்து நீட் தேர்வு எழுதிய 1,44,516 பேருக்கு மே மாதம் 18ஆம் தேதி ஆலோசனைகள் வழங்கும் நிகழ்ச்சி தொடங்கப்பட்டது. அதன்மூலம் இது வரை 54,374 மாணவ மாணவியர்களுக்கு ஆலோசனைகள் வழங்கப் பட்டுள்ளது. அதில் 177 மாணவ மாணவியர் அதிக மனநல அழுத்தத்தில் (High Risk Students) உள்ளது கண்டறியப்பட்டுள்ளது. அவர்களிடம் தொடர்ந்து பேசப்பட்டு வருகிறது. அது மட்டுமல்லாது மாவட்ட அளவில் இருக்கும் மனநல ஆலோசகர்களை அந்த மாணவர்களின் இல்லங்களுக்கு அனுப்பி அவர்களின் வாயிலாகவும் நேரடியாக மனக்குறை மற்றும் மன அழுத்தத்தை போக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. கடந்த 2 நாட்களுக்கு முன்னால் நீட் தேர்வு முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளது. அந்த தேர்வில் தேர்ச்சி பெறாத மாணவர்களை மீண்டும் தொடர்பு கொள்ள தொடங்கியிருக்கிறோம். தமிழ்நாட்டில் 1,44,516 மாணவர்கள் நீட் தேர்வு எழுதியிருந்தனர், அதில் 78,693 பேர் தேர்ச்சி பெற்றுள்ளனர். 68,823 தேர்ச்சி பெறாத மாணவ மாணவியர்களின் விவரங்கள் நீட் தேர்வு நிர்வாகத்திடம் கேட்கப் பட்டுள்ளது. அவர்களின் விவரங்கள்கிடைத்தவுடம் அந்த மாணவர்களை தொடர்பு கொண்டு மன நல ஆலோசனைகள் வழங்கப்படும். மாணவர்கள் மட்டுமல்லாமல் அவர்களுடைய பெற்றோர்களுக்கும் ஆலோசனைகள் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

இது மட்டும் அல்லாமல் , NEET தேர்வு முடிவில் 720/720 மதிப்பெண் பெற்று அகில இந்திய அளவில் முதலிடம் பெற்றுள்ள விழுப்புரம் மாவட்டத்தை சார்ந்த ஜெ. பிரபஞ்சன் ஒரு மிகப்பெரிய சாதனையை படைத்துள்ளார். அது மட்டுமல்லாமல் அகில இந்திய அளவில் முதல் 10 இடங்களில் நான்கு இடங்கள் தமிழ்நாட்டை சேர்ந்த பிரபஞ்சன், கௌஸ்தவ் பௌரி, சூர்யா சித்தார்த், வருண் ஆகிய 4 மாணவர்கள் இடம் பிடித்துள்ளது தமிழ்நாட்டிற்கு பெருமை சேர்ப்பதாக உள்ளது. இதன் மூலம் நீட் தேர்வு எழுதும் மாணவர்களுக்கு உரிய பயிற்சிகள் தமிழ்நாட்டில் கிடைக்கிறது என்பது உறுதியாகியுள்ளது.

**மருத்துவ கல்லூரி மாணவர்கள் சேர்க்கை!**

ஒன்றிய அரசு 15 சதவிகித கான கலந்தாய்வு நடத்தி முடித்தவுடன்தான் தமிழ்நாடு அரசு மீதமுள்ளவர்களுக்கு கலந்தாய்வு நடத்த வேண்டியுள்ளது. இதனால் மருத்துவ மாணவர்கள் சேர்க்கைக்கு காலதாமதம் ஏற்பட்டு வருகிறது. ஒன்றிய அரசு இந்தாண்டு ஒரே நேரத்தில் 15% மற்றும் 85% மாணவர்களுக்கும் கலந்தாய்வு நடத்திக் கொள்ளலாம் என்று அறிவுறுத் தலை வழங்கியுள்ளது. இதற்கான விதிமுறைகள் தேசிய மருத்துவ ஆணையம் உடனடியாக வழங்கினால், கடந்தாண்டு ஏற்பட்ட காலதாமதத்தையும் தவிர்த்து உடனடியாக கலந்தாய்வு நடத்தப்பட்டு மருத்துவ மாணவர்கள் சேர்க்கை விரைந்து முடிக்கப்படும். மேலும் அரசு முதன்மைச் செயலாளர் மற்றும் தேர்வுக் குழு செயலாளர் அவர்களிடம் அடுத்த வாரமே மருத்துவ மாணவர்கள் சேர்க்கை விண்ணப்பங்கள் வரவேற்கும் பணியினை தொடங்க அறிவுறுத்தப்பட்டுள்ளது. இதன் மூலம் காலதாமதமின்றி உடனடியாக மருத்துவ மாணவர்கள் சேர்க்கை உறுதிபடுத்தப்படும். மேலும், இந்த ஆண்டு, தனியார் மருத்துவக் கல்லூரிகளில் 450 இளங்கலை மருத்துவ படிப்பு இடங்களும், அரசு புதுக்கோட்டை பல் மருத்துவக் கல்லூரியில் 50 பல் மருத்துவ இடங்களும், கே.கே.நகர் ESI மருத்துவக் கல்லூரியில் 50 இளங்கலை மருத்துவ இடங்கள் என மொத்தம் 500 மருத்துவ படிப்பிற்கான இடங்கள் கூடுதலாக கிடைத்துள்ளது.

இவ்வாறு அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அரசு முதன்மைச் செயலாளர் ககன்தீப் சிங் பேடி, தேசிய நலவாழ்வு குழும இயக்குநர் திருமதி.ஷில்பா பிரபாகர் சதிஷ், தமிழ்நாடு சுகாதார அமைப்பு திட்ட இயக்குநர் கோவிந்தராவ், மருத்துவக் கல்வி தேர்வுக் குழுத் செயலாளர் மரு.முத்துச்செல்வன் மற்றும் உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

